முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.3.2025) சென்னையில் நடைபெற்ற சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி எம். தண்டபாணி அவர்களின் மகன் கார்த்திகேயன் – சாருசித்ரா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சு கண்டனத்துக்குரியது!

கல்வியில் அரசியல் செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம்!

சென்னை, மார்ச். 12-

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சு கண்டனத்துக்குரியது என்றும் கல்வியும் அரசியல் செய்யும் ஒன்றிய அரசை மன்னிக்க மாட்டார்கள் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதான் பேச்சை கண்டிக்கிறோம்.

என்ன பேசுகிறோம் என்று தெரிந்துதான் பேசுகிறாரா? அல்லது பேசச் சொல்வதை பேசுகிறாரா? கல்வியில் அரசியல் செய்யும் ஒன்றிய அரசை மக்கள் மன்னிக்க மாட்டார்கள். மாணவர்களும், ஆசிரியர்களும் இந்த துரோகத்தை மறக்க மாட்டார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்தும் போராட்டம் கல்விக்கானது. மாநில மக்களின் உரிமைக்கானது. அது வெல்லும்.

எங்களைப் பொறுத்தவரை அது ஆர்.எஸ்.எஸ். கல்விக் கொள்கை. அதை ஒரு போதும் ஏற்க மாட்டோம்.

தமிழ்நாடு போராடும்!

தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் மற்றும் கே.வி.குப்பம் வட்டத்தில் உள்ள மோர்தானா பிரதான கால்வாய் தூர்வாரி புனரமைக்கும் பணியை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன் எம்.எல்.ஏ., லே.ரவிச்சந்திரன், என்.இ சத்யானந்தம், எஸ்.சவந்தரராஜன், ஆர்.ரமேஷ், கோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் ஆணையத்தில்

இதுவரை 4 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு!

ஆணையத்தின் தலைவர் தமிழ்வாணன் தகவல்!

சென்னை, மார்ச் 12-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் ஆணையத்தில் இதுவரை 4 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு காணப் பட்டு உள்ளன. இந்த ஆணையத்துக்கு முழு நேர உறுப்பினர் செயலரை நியமிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களது முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் தன் நாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆணையத்தை உருவாக்கி அதற்கு தலைவர் மற்றும் உறுப்பினர் களை நியமித்து கடந்த 2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

தற்போது இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற ஐகோர்ட்டு நீதிபதி தமிழ்வாணன் இருந்து வருகிறார். துணை தலைவராக எழுத்தாளர் இமயம், உறுப்பினர்களாக ரேகா பிரியதர்ஷினி, செல்வக்குமார், ஆனந்த ராஜா, பொன்தோஸ், இளஞ்செழியன் ஆகியோர் இருந்து வருகின்றனர்.

இந்த ஆணையம் தொடங்கப்பட்டது முதல் தற்போது வரை 5 ஆயிரத்து 191 மனுக்கள் பெறப்பட்டு உள்ளன. இவற்றில் 4 ஆயிரத்து 38 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு உள்ளன என ஆணையத்தின் தலைவர் ஓய்வுபெற்ற ஐகோர்ட்டு நீதிபதி தமிழ்வாணன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி பெயர் பலகையில் பள்ளியின் பெயரோடு இடத்தை குறிப்பிடும் வகையில் 'அரிசன காலனி' என இருந்ததை 'மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கிழக்கு' என

பெயர் மாற்ற ஆணையம் அரசுக்கு பரிந்துரைத்தது.

இந்தப் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு பள்ளி பெயர்பலகையில் மாற்றம் செய்தது. அதே போன்று வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பலர் அளித்த மனுக்களை விசாரித்து அவர்களுக்கு நிவாரண தொகையை உடனடியாக வழங்கவும் அரசுக்கு பரிந்துரை செய்தது.

இந்த ஆணையம், சென்னை அண்ணாசாலையில் தேவ நேய பாவாணர் நூலக கட்டிடத்தின் ஒரு பகுதியில் வாடகை அடிப்படையில் செயல்பட்டு வருவதால் அண்ணாசாலையில் நிரந்தர கட்டிடத்தில் செயல்படவோ அல்லது பசுமை வழிச்சாலையில் உள்ள அரசு பங்களாவில் செயல்படவோ வழிவகை செய்ய வேண்டும் என ஆணையத்தின் தரப்பில் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

அதேபோன்று, ஆணையத்தில் பணியாற்றுபவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து மாற்றுப்பணி அடிப்படையில் நியமிக்கப்படுவதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஆணையத்துக்கென்று நிரந்தர அலுவலர்களை நியமிக்கவும், ஆணையம் சீராக செயல்பட முழுநேர உறுப்பினர் செயலரை நியமனம் செய்யவும் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

1. ஒத்திவைப்பு தீர்மானம்

நேற்று நாடாளுமன்ற கேள்வி நேரத்தில் தொகுதி மறுவரையறை குறித்து விவாதிக்க வேண்டும் என கேட்டு திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் மக்களவையிலும் மாநிலங்களவையில் திமுக மாநிலங்களவை குழுத்தலைவர் திருச்சி. சிவா எம்.பி அவர்களும் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்கள். மாநிலங்களவையில் தீர்மானத்தை ஏற்று பேச அனுமதிக்காததால் திமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்து நாடாளுமன்ற வளாகத்தில் வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

2. அதிகரிக்கும் வேலைவாய்ப்பின்மை ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

சி.என்.அண்ணாதுரை

தொடர்ந்து அதிகரித்து வரும் வேலையில்லா பிரச்சினைகளை மக்களவையில் சுட்டிக்காட்டிய திமுக எம்.பி., சி. என். அண்ணாதுரை. அதற்காக ஒன்றிய அரசு எடுத்திருக்கும் திட்டங்கள் என்ன என்று விளக்கம் கேட்டு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர். தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட தொழில்கள் மற்றும் அதனால் பயன்பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கையை வெளியிட வேண்டும் என கேட்டுள்ளார்.

குறிப்பாக கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் சிறப்பு முயற்சிகளைத் தொடங்கியிருந்தால் அதன் விவரங்கள், அதேபோல் கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு மற்றும் தனியார் துறையால் உருவாக்கப்பட்ட மொத்த வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையும் வெளியிட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அதேபோல் தேர்தலில் வாக்குறுதி அளித்ததுபோல் ஒன்றிய அரசு நாடு முழுவதும் தனியார் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டின் மின்தேவையை நிறைவேற்றுமா ஒன்றிய அரசு?

எம்.எம்.அப்துல்லா

எதிர்வரும் கோடைக்காலத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் மின் தேவையை நிறைவேற்ற ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவையில் திமுக எம். பி. எம். எம். அப்துல்லா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏற்கனவே உள்ள மின் திட்டங்களில் திறன் சேர்ப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மின் துறை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மத்திய நிதி எவ்வளவு. தமிழ்நாட்டில் கடலோர காற்றாலை திட்டத்தை மேம்படுத்தவும். ஆற்றல் சேமிப்புத் திறனை மேம்படுத்தவும் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

4. தொடரும் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் - ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

பி. வில்சன்

கடந்த பத்தாண்டுகளில் சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதும் ஒன்றிய அரசு அதை கண்டு கொள்ளாமல் இருப்பதையும் குறித்து மாநிலங்களவையில் திமுக எம்.பி. பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

2014 முதல் மாநிலவாரியாக பதிவான சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்களின் விவரங்கள் மற்றும் சிறுபான்மையினர்மீது பிற சமூகங்கள் ஏவும் வன்முறையில் இருந்து சிறுபான்மையினரைப் பாதுகாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வெளிப்படையான விளக்கம் வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

மேலும் நிலைக்குழு தனது 53வது அறிக்கையில்பரிந்துரைத்தபடிசிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க தேசிய சிறுபான்மையினர் ஆணையத்திற்கு (NCM) அரசியலமைப்பு அந்தஸ்து வழங்குவது குறித்து அரசு இன்னும் நடவடிக்கை எடுக்காதது ஏன் என்றும் பௌத்தம் மற்றும் சீக்கியம் தவிர பிற மதங்களுக்கு மாறிய தலித்துகளுக்கு SC அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமா என்பதை ஆராய்வது தொடர்பாக கே.ஜி. பாலகிருஷ்ணன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் நிலை என்ன என்பதையும் ஒன்றிய அரசு பதிலளிக்க வேண்டும் என பி. வில்சன் கேட்டுள்ளார்.

நிவேதா முருகன் எம்.எல்.ஏ. - எம் பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை மாவட்டத்தில் பூம்புகார், திருக்கடையூரில் கள ஆய்வு!

அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் மேற்கொண்டார்!

மயிலாடுதுறை, மார்ச் 12-

மயிலாடுதுறை மாவட்டம் சிதம்பரத்தில் இருந்து 20 கி.மீ தொலைவிலும் பிச்சாவரத்தில் இருந்து 16 கி.மீ. தொலைவிலும் கொடியம்பாளையம் கடற்கரை அமைந்துள்ளது. மேகநாதன் ஒரு சுத்தமான கடற்கரை. அண்டை மாவட்டங்களிலிருந்து பல சுற்றுலாப் பயணிகள் வார இறுதி நாட்களில் வருகை தருகின்றனர். அந்த வகையில் 2022 ம் ஆண்டில் சுமார் 40 ஆயிரம் சுற்றுலா பயணிகளும், 2023 ம் ஆண்டில் 60 ஆயிரம் சுற்றுலா பயணிகளும், 2024ம் ஆண்டில் சுமார் 75 ஆயிரம் சுற்றுலா பயணிகளும் வருகை புரிந்துள்ளனர்.

அதனால், இந்த அழகான சுற்றுலா மையத்தை மேம்படுத்த வேண்டுமென சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே சுற்றுலாத்துறை வல்லுனர் மூலம் ரூ.1.23 கோடியில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளின் வசதிகள் மேம்படுத்த பார்வை தளம், கழிப்பறை வசதி, பாதை வசதி, விளக்கு வசதி, புல்வெளி, தோட்டம், சுற்றுலா பயணிகள் தங்கும் அறை, கியாஸ்க் போன்ற வசதிகள் ஏற்படுத்துவதை தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அதைத் தொடர்ந்து பூம்புகார் தொகுதி திருக்கடையூரில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறை யின், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் ஓட்டல் தமிழ்நாடு மற்றும் பூம்புகார் சுற்றுலா வளாகம் ரூ.23 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருவதை சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் முழுமையாக உள்ளனவா என்பதனை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள். தொடர்ந்து, பூம்புகார் சட்டமன்ற தொகுதி பூம்புகாரில் சுற்றுலாத்துறையின் சார்பில் ரூ.23 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா வளாகம் மேம்படுத்தப்பட்டு வருவதையும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் பார்வையிட்டு பணிகளின் தரத்தினை ஆய்வு செய்தார்கள்.

ஆய்வு செய்த பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் துறையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் 'ஓட்டல் தமிழ்நாடு' கடந்த 2016ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இயங்கி வருகிறது. இதில் 11 குளிர்சாதன மற்றும் குளிர்சாதனம் இல்லாத அறைகள் செயல்பட்டு வருகிறது. முழு நேர உணவகம் கடந்த 2018ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேலும், திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயில், அருகாமையில் உள்ளதால் பக்தர்களின் வசதிக்கேற்ப 'ஓட்டல் தமிழ்நாடு' இயங்கி வருகிறது. இதனை ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், பூம்புகார் சுற்றுலா வளாகமானது 17.04.1973 அன்று முன்னாள் முதலமைச்சர் , முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வளாகத்தில் சிலப்பதிகார கலைக்கூடம், பாவை மன்றம், இளஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம் மற்றும் கொற்றப்பந்தல் ஆகியன அழகுற அமைந்துள்ளன. தற்போது, பூம்புகாரில் ரூ.23 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா தளம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், சுற்றுச்சுவர், வாகனம் நிறுத்துமிடம், வருகை பிளாசா மூன்று எண்ணிக்கை, கழிப்பறை, பொருள் வைப்பறை, நுழைவுச்சீட்டு அறை, தகவல் கூடம், பாரம்பரிய விளக்கு வசதி, பிளம்மிங், கலை வேலைப்பாடு, சிலப்பதிகார கலைக்கூட புனரமைப்பு உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் பேட்டியில் தெரிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், கடலூர் மாவட்டம் சிதம்பரம் சார் ஆட்சியர் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் உமா மகேஷ்வரி, சுற்றுலா வளர்ச்சி துறை மண்டல மேலாளர் பிரபுதாஸ், சுற்றுலா வளர்ச்சிக் கழக செயற்பொறியாளர் ரத்தினவேலு, உதவி .உமாசங்கர்,சுற்றுலா அலுவலர் கஜேந்திரகுமார் கழக உயர் நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், தகவல் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், உறுப்பினர்கள் ஜி.என்.ரவி , இல. மேகநாதன், ஒன்றிய கழக செயலாளர்கள் செல்லசேது.ரவிக்குமார் மலர்விழி திருமாவலவன், அமிர்த .விஜயகுமார், எம். அப்துல் மாலிக், ப.முருகமணி, பி. எம்.அன்பழகன், ஏ.ஜி. ஜெ.பிரபாகரன், பஞ்சு. குமார், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர் ராஜா. நகரக் கழக செயலாளர்கள் குண்டாமணி (எ). என்.செல்வராஜ் ம. சுப்பராயன், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கிழக்கு ஒன்றியம் திருவெண்காட்டில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, இராம.இளங்கோவன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர், சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சு.குமார், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் எம்.தினேஷ்குமார் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பி. க்களை தரக்குறைவாக பேசிய ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து மயிலாடுதுறையில் மயிலாடுதுறை மாவட்டக கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ)என்.செல்வராஜ்,தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி எம் ஸ்ரீதர் இலக்கிய அணி மாநில துணைச் செயலாளர் சௌமியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம் .கே . மருது, மற்றும் நகர,வார்டு கழக நிர்வாகிகள் உள்ளனர்.